ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1770/15 - 2012 අගෝස්තු මස 08 වැනි බදාදා - 2012.08.08
*1770/15 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ 1/2011*

### *2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம்*

*2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 30 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிரிசேன,
சுகாதார அமைச்சர்.

கொழும்பு 11,
2012, யூலை 25.

***ஒழுங்குவிதிகள்***

1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, புகையிலை உற்பத்திப் பொருட்கள் (சுட்டுத் துண்டிடல் மற்றும் பொதியிடல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் வர்த்தமானியில் இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதி முடிவுற்ற பின்னரான திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளின் சிப்பம், பொதி, அட்டைப்பெட்டி அல்லது சுட்டுத்துண்டு எதுவும் ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளின் பாவனையிலிருந்து எழுகின்ற ஏதேனும் வெளியேற்றுகை அல்லது ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளின் பாவனையிலிருந்து எழுகின்ற சுகாதாரத்தின் மீதான விளைவுகள் அல்லது தீங்குகள் பற்றிய பொய்யான, தவறான அல்லது ஏமாற்றும் ஏதேனும் செய்தியைக் கொண்டிருத்தல் ஆகாது.

3. விற்பனைக்காக விநியோகிக்கப்பட்ட, விற்கப்பட்ட அல்லது விற்பனைக்கு முனையப்பட்ட ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளின் சிப்பம், பொதி, அட்டைப் பெட்டி அல்லது சுட்டுத்துண்டு எதுவும் "தாழ்ந்த", இலேசான, "தீவிரமான", "மென்மையான" அல்லது "மேலதிக" போன்ற அத்தகைய சொற்களைப் பயன்படுத்துவதன்மூலம் விநியோகிக்கப்பட்ட, விற்கப்பட்ட அல்லது விற்பனைக்கு முனையப்பட்ட வேறு ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளைவிடக் குறைந்தளவிலான தீங்கை விளைவிக்கும் என்ற எண்ணத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாக உருவாக்குகின்ற அல்லது உருவாக்கும் சாத்தியமுள்ள ஏதேனும் பதத்தை, விவரணத்தை, வியாபாரக் குறியை, உருவமைப்பை அல்லது வேறு ஏதேனும் அடையாளத்தைக் கொண்டிருத்தல் ஆகாது.

4. ஏதேனும் சிகரெட் சிப்பம், பொதி அல்லது அட்டைப்பெட்டியின் உற்பத்தியாளர், இறக்குமதியாளர், சில்லறை விற்பனையாளர், களஞ்சியப் பொறுப்பாளர், முகவர் அல்லது விற்பனையாளர் எவரும், இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு குறித்துரைக்கப்பட்ட உடனலம் பற்றிய எச்சரிக்கையைக் கொண்டுள்ள விநியோகிக்கப்பட்ட, விற்கப்பட்ட அல்லது விற்பனைக்கு முனையப்பட்ட சிகரெட்டுக்களைக் கொண்டுள்ள சிப்பம், பொதி அல்லது அட்டைப்பெட்டி ஒவ்வொன்றும் கொண்டிருந்தாலன்றி, ஏதேனும் அத்தகைய சிப்பம், பொதி அல்லது அட்டைப் பெட்டியை உற்பத்தி செய்தல், வழங்குதல், விநியோகித்தல், விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்கு முனைதல் ஆகாது.

5. இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு உடனலம்பற்றிய எச்சரிக்கையின் படவிளக்கம் ஆனது சிகரெட்டைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு சிகரெட் சிப்பம், பொதி அல்லது அட்டைப் பெட்டியின் இரண்டு பக்கங்களிலும் அச்சிடப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒரு சிப்பம், பொதி அல்லது ஒரு அட்டைப்பெட்டியின் மொத்த இடப்பரப்பின் (80%) எண்பது சதவீதத்துக்கு குறையாத இடப்பரப்பினைக் கொள்ளும் வகையில் இருத்தல் வேண்டும்.

6. ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளின் விற்பனை தொடர்பில் பயன்படுத்தப்பட்ட சிப்பம், பொதி, அட்டைப்பெட்டி அல்லது சுட்டுத்துண்டு ஒவ்வொன்றின் மீதும் அத்தகைய சிப்பம், பொதி, அட்டைப்பெட்டி அல்லது சுட்டுத்துண்டில் உள்ளடங்கியுள்ள புகையிலை உற்பத்திப் பொருளின் இயைபான ஆக்கக்கூறுகள் மற்றும் வெளியேற்றுகைகள், போர்மல்டிஹைட் மற்றும் வேறு நச்சுப் பொருட்கள் ஏதேனும் இருப்பின், அவை உள்ளடங்கலாக அச்சிடப்படுதல் வேண்டும்.

7. சிப்பம், பொதி, அல்லது அட்டைப்பெட்டியில் விற்கப்பட்டாலும் சரி ஒவ்வொரு புகையிலை உற்பத்திப் பொருளின் மீதும் திகதி, மாதம் மற்றும் உற்பத்தி ஆண்டு என்பன அதன்கண் அச்சிடப்படுதல் வேண்டும்.

8. ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளின் ஏதேனும் சிப்பம், பொதி, அட்டைப்பெட்டி அல்லது சுட்டுத்துண்டின் மீது ஏதேனும் வெளியேற்றுகையுடன் தொடர்புடைய ஒவ்வொரு உடனலம் பற்றிய எச்சரிக்கையும் மற்றும் வேறு தகவல்களும் அதன்கண் மூன்று மொழிகளிலும் பத்திற்கு (10) இற்கு குறையாத எழுத்து அளவில் அச்சிடப்படுதல் வேண்டும்.

9. சிகரெட் உற்பத்திப் பொருளின் ஏதேனும் சிப்பம், பொதி, அட்டைப்பெட்டி அல்லது சுட்டுத்துண்டின் மீதான உடனலம் பற்றிய எச்சரிக்கைப் படவிளக்கமானது ஏதேனும் வேறு அடையாளங்கள் அல்லது படங்கள் மூலம் மறைக்கப்படுதலாகாது என்பதுடன், ஒன்றில் கறுப்பு எழுத்துக்களில் வெள்ளைப் பின்னணியின் மீது அல்லது வெள்ளை எழுத்துக்களில் கறுப்புப் பின்னணியின் மீது அச்சிடப்படுதல் வேண்டும்.

10. சிகரெட் உற்பத்திப் பொருட்களின் வேறுபட்ட தரங்களின் ஒவ்வொரு உற்பத்தியாளரும் புகையிலை உற்பத்திப் பொருளைக் கொண்டுள்ள ஏதேனும் சிப்பம், பொதி, அட்டைப்பெட்டியில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு வகுதியின் படவிளக்க உடனலம் பற்றிய எச்சரிக்கையின் ஒரு வகை மட்டுமே அச்சிடப்படுதல் வேண்டும் என்பதை உறுதிசெய்வதுடன், அத்தகைய படவிளக்க உடனலம் பற்றிய எச்சரிக்கையானது ஆறு மாதங்களுக்கொரு தடவை மாற்றப்படுதலும் வேண்டும்.

**அட்டவணை**

சுகாதார எச்சரிக்கை

1. புகைத்தல் சிறுவர்களை நோய்க்குள்ளாக்கும்

வகை I




வகை II



2. புகைத்தல் இருதய நோய்களை ஏற்படுத்தும்

வகை I




3. புகைத்தல் புற்று நோயை ஏற்படுத்தும்

வகை I




வகை II



வகை III




வகை IV




*4.* புகைத்தல் பாலியல் வீரியத்தைப் பாதிக்கும்

வகை I




*08-659*